## 148. நன்றி நன்றி நன்றி

### பல்லவி

நன்றி நன்றி நன்றி என்று சொல்லிடுவேன்
நன்மைகளை செய்தவரை எண்ணிடுவேன்

### அனுபல்லவி

கரம் பிடித்து இதுவரை நடத்தி வந்தவர்
காலமெல்லாம் கன்மணிபோல் காத்து வருபவர்

### சரணங்கள்

1. நீங்கசெய்த நன்மைக்கு என்னத்தை செலுத்துவோம்
   இரட்சகர என்றென்றும் தொழுதிடுவோம்
   - நன்றி நன்றி

2. பாவத்தின் அடிமையில் இருந்த எங்களை
   விடுவித்து உந்தன் பிள்ளையாக்கி விட்டிரே
   - நன்றி நன்றி

3. திக்கற்ற பிள்ளைகளின் தகப்பனும் நீரே
   தேவைகளை அறிந்த நல்ல தாயும் நீரே
   - நன்றி நன்றி

4. கருவினிலே உருவாகும் முன்னே அறிந்தவர்
   தாயின் வயிற்றினின்று எடுத்தவர் நீரே
   - நன்றி நன்றி